


# Nallamuthu Gounder Mahalingam College (Autonomous)

Re-Accredited by NAAC and ISO 9001 : 2015 Certified Institution
**Ranked 101-150 among Colleges in India by MHRD - NIRF**
Affiliated to Bharathiar University, Coimbatore.
**POLLACHI - 642 001.**

NGMC EXPANSION WITH EXCELLENCE

## SWAMI VIVEKANANDA STUDENTS THINKERS FORUM
## International Conference on Swami Vivekanandharum, Mahakavi Bharathiyarum

EMPOWER THE YOUTH TO ENRICH THE NATION



# CERTIFICATE

*This is to certify that Dr. / Mr. / Ms.* Dr. N. JAYASUDHA, நா. ஜெயசுதா
தமிழ் உதவிப்பேராசிரியர், என்.ஜி.எம் கல்லூரி பொள்ளாச்சி
*Participated / Presented a paper entitled*
"இரு பெரும் சமூக மேதைகள்"
*in the International Conference on* **"Swami Vivekanandharum, Mahakavi Bharathiyarum",** *organized by Swami Vivekananda Students Thinkers Forum, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi on* 02-05-23.

| | | | | |
|---|---|---|---|---|
| **Prof. K. Srinivasan**<br>Co - ordinator | **Dr. K. Dhanalakshmi**<br>Co - ordinator | **Dr. P. Archanaa**<br>Co - ordinator | **Dr. R. Muthukumaran**<br>Principal | **Dr. B.K. Krishnaraj Vanavarayar**<br>President |

# சுவாமி விவேகானந்தரும் மகாகவி பாரதியாரும்



தொகுப்பாசிரியர்கள்
பேரா. க. ஸ்ரீனிவாசன்
முனைவர் க. தனலட்சுமி
முனைவர் பொ. அர்ச்சனா

சுவாமி விவேகானந்தர் மாணவர் சிந்தனை மன்றம்
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி - 642 001

# உறுதி மொழி

வீரத்துறவி விவேகானந்தப் பேரொளியே! மாணவ, மாணவியராகிய நாங்கள் தங்களுக்குத் தரும் உறுதிமொழி:-

அரிதான இந்த மானுடப் பிறப்பை அலட்சியம் செய்யாமல், பொறுப்போடு வாழ்ந்து, செயற்கரிய காரியங்களைச் செய்வோம்!

தாங்கள் காட்டிய ஞான மார்க்கத்தைப் பின்பற்றி எங்களுள் புதைந்து கிடக்கும் அளவற்ற அறிவையும், ஆற்றலையும் முழுமையாக வெளிப்படுத்தி, உன்னத இலட்சியத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்து, வித்தியாசமாகச் சிந்தித்து. துணிவோடு செயல்பட்டு புதிய சரித்திரம் படைப்போம்!

சாதி, மத, இன உணர்வுகளை எல்லாம் கடந்து நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வோடு செயல்பட்டு, நாட்டின் ஜனநாயகத்தையும், ஒருமைப்பாட்டையும் போற்றிப் பாதுகாப்போம்!

பாரம்பரியச் சிறப்புமிக்க நம் கலாச்சாரத்தை எந்நாளும் கட்டிக் காப்போம்!

நவீன விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி தேசத்தின் சமூக, பொருளாதார அந்தஸ்தை உயர்த்தி, பாரதத்தை 21ஆம் நூற்றாண்டில் உலகை ஆளும் வல்லரசாக உருவாக்குவோம்!

எங்களுக்கு அமைந்த வாழ்வையும், வாய்ப்பையும் முறையோடு பயன்படுத்தி. நாங்களும் வாழ்க்கையில் உயர்ந்து, எங்களை உயர்த்திய சமுதாயத்தையும் உயர்த்துவோம்!

இந்தக் கனவை நனவாக்கும் வரை ஓயமாட்டோம்!
இது சத்தியம்! வந்தே மாதரம்!

- டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

Scan Me

கட்டுரை

ISBN 978-81-2344-448-2

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

Code No. A 4802 ₹ 360/-

Language: Tamil

**Swami Vivekanandharum Mahakavi Bharathiyarum**

Editors: Prof. K.Srinivasan, Dr. K.Dhanalakshmi, Dr. P.Archanaa
Nallamuthu Gounder Mahalingam College,
Pollachi - 642 001
First Edition: April, 2023
Copyright: Edited
No. of pages: 236
Publisher:
**New Century Book House Pvt. Ltd.,**
41-B, SIDCO Industrial Estate,
Ambattur, Chennai - 600 050.
Tamilnadu State, India.
Email : info@ncbh.in
Online : www.ncbhpublisher.in

ISBN: 978 - 81 - 2344 - 448 - 2

Code No. A4802

**₹ 360/-**

**Branches**

**Ambattur** 044 - 26359906 **Spenzer Plaza (Chennai)** 044-28490027
**Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Thanjavur** 04362-231371
**Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452-2344106, 4374106
**Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667
**Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387
**Ooty** 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800
**Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

**சுவாமி விவேகானந்தரும் மகாகவி பாரதியாரும்**

தொகுப்பாசிரியர்கள்: பேரா.க.ஸ்ரீனிவாசன்,
முனைவர் க.தனலட்சுமி, முனைவர் பொ.அர்ச்சனா
**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,**
பொள்ளாச்சி-642 001
முதல் பதிப்பு: ஏப்ரல், 2023

*அச்சிட்டோர்:* **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**
16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14
☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

13. முண்டாசு ஞானியும் முண்டாசுக் கவிஞனும் தேடிய நாடும் மக்களும் 80
-முனைவர் ம.சித்ரகலா

14. சுவாமி விவேகானந்தரும் மகாகவி பாரதியும் 88
-முனைவர் வெ.பரிமளம்

15. விவேகானந்தர் - பாரதியாரின் உலகப் பொது நோக்குப் பார்வை 92
-முனைவர் இரா.ஜெயந்தி

16. இருபெரும் சமூக மேதைகள் 98
-முனைவர் ந.ஜெயசுதா

17. பாரதியின் கவிதைகள் வெளிப்படுத்தும் வீர சுதந்திரம் 105
-முனைவர் ந.இரவிக்குமார்

18. பாரதியின் கவிதை அழகியல் 109
-முனைவர் சை.வஹிதா கௌசியா

19. பாரதி பேணிய வாழ்வியல் நெறிகள் 115
-முனைவர் க.ரேணுகாதேவி

20. சுவாமி விவேகானந்தரும் மகாகவி பாரதியாரும் ஓர் ஒப்பீடு 119
-பொ.கௌசல்யாதேவி

21. பாரதியின் கண்ணனும் கண்ணம்மாவும் 124
-முனைவர் செ.மகேஸ்வரி

22. விவேகானந்தரும் பாரதியாரும் 129
-முனைவர் த.புஷ்பராணி

23. விவேகானந்தரும் பாரதியாரும் 135
-முனைவர் பா.அருள்ஜோதி

24. விவேகானந்தர், பாரதியார் வாழ்வில் நிவேதிதாவின் நிலைப்பாடும் மூவர் வாழ்வும் 143
-மு.சுகந்தி

25. சுவாமி விவேகானந்தர், மகாகவி பாரதியாரின் சுயமுன்னேற்ற சிந்தனைகள் 152
-நா.பன்னீர்செல்வம்

26. பன்முக பாரதி 157
-முனைவர் த.விஜய சித்ரா

# 16. இருபெரும் சமூக மேதைகள்

முனைவர் ந.ஜெயசுதா,
தமிழ் உதவிப்பேராசிரியர்,
என்.ஜி.எம்.கல்லூரி,
பொள்ளாச்சி.

கற்றறிந்து புலமைபெற்றவர்கள் மேதைகள் என்று பொருள். மேதைகளாக இங்கு போற்றக்கூடியவர்கள் நரேந்திரன் என்ற இயற்பெயருடைய விவேகானந்தரும், சுப்பிரமணியம் என்ற இயற்பெயருடைய மகாகவி பாரதியும் உலகப் புகழ்பெற்ற இருபெரும் மேதைகளாகும். இந்திய நாட்டினுடைய சிந்தனைகளோடு தங்களை ஈடுபடுத்திக்கொண்டவர்கள் இவர்கள்.

எழுச்சி மிக்க துறவியாக உலகத்தின் பல திசைகளுக்கும் சென்று தனது சமூகக் கருத்துக்களைப் பரப்பியவர் விவேகானந்தர். புரட்சி மிகுந்த கவிதைகளால் சமுதாயத்தில் படிந்துள்ள தூசுகளையெல்லாம் களையப் போராடி, பாடல் பாடியவர் பாரதியார். இவ்விருவரின் சிந்தனைகளும் நம் பாரதத்தின் மீது இருக்கின்ற தன்மையை ஆய்வதாக இக்கட்டுரை அமையவுள்ளது.

கல்வி:

பண்டைய காலங்களில் மக்கள் ஒருவருக்கொருவர் பார்த்துப் பழகியும் பேச்சுவழக்கிலும், கதைகள் சொல்லியும், கேட்டும் அறிவை வளர்த்துக்கொண்டனர். இந்தப் பின்னணியில் இருந்து கல்வி முறைகள் உருவாகியுள்ளன. ‘அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்’ என்று ஔவையாரால் போற்றப்படும் திருக்குறள், ஒரு பிறவியில் தான் கற்ற கல்வியானது ஒருவனுக்குத் தொடர்ந்து வரும் ஏழு பிறப்புக்கும் அவனைப் பாதுகாக்கும் சிறப்புடையதாகும் என்கிறது.

‘பிச்சைபுகினும் கற்கை நன்றே’என ஔவையாரும்,‘கல்வி இல்லா நிலம் களர்நிலம், அதில் புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைவதில்லை’ என்று பாரதிதாசனும் கூறும் கல்வி குறித்த சிந்தனைகளை நாம் அறிவோம். இலக்கியங்கள் சொல்லும் அனுபவக் கல்வியையும் நாம் பின்பற்றுதல் வேண்டும்.

‘ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒருவித உபயோகமும் கிடையாது’ என்ற காந்தியடிகளின் சிந்தனையை இங்கு நினைவுகூரலாம்.



பாரதியார்,

“வேறுவேறு பாசைகள் கற்பாய் நீ
வீட்டுப் பாசைகற்கிலாய்
போ போ போ” (பாரதியர் கவிதைகள்)

என்று பாரதியார் தன் கவிதைகளில் பொங்கி எழுகிறார். கல்வி முறைகள் தன் தாய்மொழியில் கற்பதுவே சிறந்தது என்பதைத் தெளிவுபடுத்தி நம் தாய்மொழிப் பற்றையும் கல்வியின் முக்கியத்துவத்தையும் பதிவு செய்கின்றார். மேலும், நம் தமிழர்கள் கல்வியில் முதன்மையானவர்கள் என்பதை,

“கல்விசிறந்த தமிழ் நாடு - புகழ்
கம்பன் பிறந்த தமிழ்நாடு - நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின் - மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு
வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்டதமிழ் நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
யாரம் படைத்ததமிழ் நாடு” (பாரதியர் கவிதைகள்)

என்று தமிழர்களின் மத்தியில் கல்வி அறிவு குறிக்கிடவில்லை. காப்பியங்கள், வேதங்களும் பல இலக்கியங்களும் பிறந்து தவழ்ந்தது நமது நாட்டில் என்று பெருமையுடன் மார்தட்டினாலும், ஆயிரம் கோயில்கள் கட்டுவதைவிட ஒரு பள்ளிக்கூடம் கட்டுவது சிறந்தது என்று வரும் தலைமுறையினருக்கு கல்வி அவசியம் என்பதை அறிவுறுத்தவும் தவறவில்லை அந்த முண்டாசுக் கவிஞன்.

விவேகானந்தரின் சிந்தனையில், “கல்வி என்பது உன்னுடைய மூளைக்குள் பல விசயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விசயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணமாகாமல் உனக்குத் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கும்.” (விவேகானந்தரின் அறிவுரைகள்-ப.34) மேலும், பல இடங்களுக்கு பயணம் மேற்கொண்டதன் விளைவாக அங்கங்கே வாழ்வோரின் பழக்க வழக்கங்களையும் அவர்களின் பொருளாதாரத்தையும் நன்கு கவனித்திருக்கிறார் என்பதற்கு, “கல்வி கல்வி கல்வி ஒன்றே இப்போது நமக்குத் தேவை! ஐரோப்பாவின் பல நகரங்களுக்கு நான் பிரயாணம் செய்திருக்கிறேன். அங்கே சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கூட கிடைத்திருக்கும் வாழ்க்கை வசதிகளையும் கல்வியையும் நான் கவனித்திருக்கிறேன். அப்போதெல்லாம் நமது நாட்டு ஏழை எளிய மக்களின் பரிதாப நிலையை நினைத்து நான் கண்ணீர் விட்டு

அழுதிருக்கிறேன். இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம்? என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை." (விவேகானந்தரின் அறிவுரைகள்)

என்ற கருத்தின்வழி விவேகானந்தர் பல வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டு, தமிழகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் ஆற்றல் வாய்ந்த விவேகமூர்த்தியாக விளங்கியதோடு அவர்களைவிட நாம் உயர்ந்தவர்களாக வேண்டும் என்று தெளிவுபடுத்துகின்றார். மேலும் கல்வியை நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் கொண்டு செல்ல வேண்டும். எல்லோருக்கும் கல்வி கொடுப்பது நமது தேசிய இலட்சியமாக இருக்க வேண்டும் எனவும் பதிவுசெய்கின்றார்.

"எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மன வலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை" (விவேகானந்தரின் அறிவுரைகள்- ப37) என்று கல்வி குறித்தான பல கருத்துக்களை நமக்குப் போதித்துள்ளார்.

அஞ்சாமை:

இவ்வுலக உயிர்களுக்கு தைரியத்தை எடுத்துச் சொல்லி எதற்கும் அஞ்சுதல் கூடாது என்பதற்கு,

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
துச்சமாக எண்ணி நம்மைத் தூறு செய்த போதினும்
அச்சமில்லைஅச்சமில்லைஅச்சமென் பதில்லையே
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சை கொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட போதினும்.
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"
(பாரதியார் கவிதைகள்-ப.158)

என்று நமக்கு எந்த நிலை ஏற்பட்டாலும் பயம் வேண்டாம்; அஞ்சாது எதிர்த்து நில் எனப் பாடுகிறார் பாரதியார்.

இந்த முண்டாசுக் கவிஞனின் எண்ணத்திற்கு ஏற்ப விவேகானந்தரும் அஞ்சாது எதிர்த்து நிற்கும் பாங்கைப் பதிவுசெய்கிறார்.

"ஒரு சமயம் நான் காசியில் இருந்தபோது, ஒரு பாதை வழியாகச் சென்றுகொண்டிருந்தேன். அந்தப் பாதையின் ஒருபுறம் நீர் நிறைந்த ஒரு பெரிய குளமும் மறுபுறம் உயர்ந்த சுவரும் எழுப்பப்பட்டிருந்தன.



அந்த இடத்தில் பல குரங்குகள் இருந்தன. காசியைச் சேர்ந்த குரங்குகள் மிகவும் பொல்லாதவை. சில சமயங்களில் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளக்கூடியவை. அவை தங்கள் பாதையில் செல்லவிடக்கூடாது என்று நினைத்தன போலும்! எனவே, நான் செல்லச் செல்ல அவை தீர்ச்சிட்டுப் பெரும் சத்தமிட்டபடி என் கால்களைப் பற்றின. அவை நெருங்க நெருங்க நான் ஓட ஆரம்பித்தேன். ஆனால், நான் ஓட ஓட அவையும் பின்தொடர்ந்து ஓடி வந்து என்னைக் கடித்தன. அந்தக் குரங்குகளிடம் இருந்து தப்பவே வழியில்லை என்று எனக்குப் பட்டது. ஆனால், அப்போது முன்பின் அறிமுகம் இல்லாத ஒருவரை வழியில் சந்தித்தேன். அவர் என்னை நோக்கி, குரங்குகளை எதிர்த்து நில்! என்று கூறினார். நான் திரும்பி, குரங்குகளை எதிர்த்து நின்றேன். அவை பின்வாங்கி முடிவில் ஓடியே மறைந்தன. இதுவே வாழ்க்கை முழுவதற்கும் படிப்பினையாகும். பயங்கரத்தை எதிர்த்து நில்! அஞ்சாமல் அதை எதிர்த்து நில்! (விவேகானந்தரின் அறிவுரைகள் ப.8) என்ற இவரின் அறிவுரைகள் வாழ்வில் அஞ்சாது எதிர்த்துப் போராடினால்தான் நம்மைக் கண்டு பிறர் அஞ்சுவர், நம்மை அவமதிக்க மாட்டார்கள் என்பதை உணர்த்துகிறார்.

நாட்டுப்பற்று:

"பாரதநாடு பழம் பெரும் நாடு" என்று தமிழகத்தின் பழமையை முன்னெடுத்துக்கொண்டு நம் தேசத்தைக் காக்க விளைகின்றார் பாரதி. அவரின் நாட்டுப் பற்றுடைய எண்ணமே கவிதையை எழுதத் தூண்டியது எனலாம்.

"பாரததேசம் என்றுபெயர் சொல்லுவார் -மிடிப்
பயங் கொல்லுவார் துயர்ப் பகைவெல்லுவார்"

என்று பாரதப் பெருமையை வீரத்துடன் வெளிப்படுத்துகின்றார். சுதந்திரப் போராட்டத்தில், பாரதியாரின் பாடல்கள் காட்டுத் தீயாய் பரவி தமிழர்களை வீறுகொள்ளச் செய்தது.

"சுத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்"

என்று நெருப்புக்கனலாய் கொந்தளித்தார் மகாகவி பாரதியார். பாரத நாட்டைத் தாயாக உருவகம் செய்து பாடுகிறார்.

"வந்தேமாதரம் என்போம்-எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்" என்றும்,

இந்த நாடு வெறும் மண்ணும் கல்லும் மரமும் அல்ல.'என் தாயும் தந்தையும் பிறந்த பூமி. அவர்கள் தாயும் தந்தையும் வாழ்ந்த பூமி. அவர்கள் வெந்ததைத் தின்று விதி வந்தால் சாகிற' வெற்று மாந்தர் இல்லை. சிந்தனையில் ஆயிரம் எண்ணங்களைக் கொண்டுள்ளவர்கள் என்று எளிய மனிதனின் நெஞ்சிலும் உணர்ச்சி ஊட்டும் கவிதை வரிகளை வீசுகின்றார்.

பரந்து விரிந்த தமிழகத்தை இவர்போல் யாராலும் பாடமுடியாது. அத்தகைய உணர்ச்சி யெழும் கவித்துவம்,'பாரதிக்கு நிகர் பாரதிதான்' என்று சொல்ல வேண்டும்.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று தமிழ்நாட்டின் இனிமையை வலம் வரும் வகையில் அமைந்துள்ளது.

"இரும்பைக் காய்ச்சிஉருக்கிடு வீரே!
யந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரம்தொழில் செய்திடு வீரே!"

என்கிற வரிகளில் பாரதியின் பாரதம் தெரிகின்றது. நாட்டு மக்கள் மீது கொண்ட பற்றால் ஒவ்வொருவரும் தனக்கான தொழிலைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள பல வழிகளைக் காட்டுகின்றார். இவ்வாறாக பாரதியின் தேசப்பற்று உணர்வினை அவரது கவிதைகள் தெளிவுறக் காட்டுகின்றன. தேசத்தின் மீது கொண்ட பற்றால் விவேகானந்தர் தனது நூலில்,

"எழுமின்! விழிமின்! நமது தாயகமாகிய பாரததேவி, தனது அழிவற்ற அரியணையின் மீது புத்திளமை பெற்றவளாக, முன்பு எப்போதுமே இருந்ததை விடவும் அதிகமான மகிமை கொண்டவளாக அமர்ந்திருப்பதைக் காணுங்கள். அமைதியும் வாழ்த்தும் நிறைந்த குரலில் இந்தப் பாரத அன்னையின் மகிமையை உலகம் முழுவதிலும் பிரகடனப்படுத்துங்கள்"(புதிய இந்தியாவைப் படைப்போம்;.ப.103) என்றும்,

"உங்களுடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுங்கள். நமக்குத் தேவை, இரும்பைப் போன்ற தசைகளும், எஃகைப் போன்ற நரம்புகளும்தான். காலமெல்லாம் அழுதுகொண்டிருந்ததுபோதும். இனி அழுகை என்ற பேச்சே இருக்கக்கூடாது. சுய வலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்." (ப.96) விவேகானந்தரின் அறிவுரைகள் என்ற தொகுப்பு நூலிலும் தன்னம்பிக்கையூட்டும் கருத்துக்களைத் தன் நாட்டுப் பற்றோடு மக்களிடம் விதைக்கின்றார்.



தன்னம்பிக்கை:

பாரதியின் பகுத்தறிவுக் கருத்துக்கள் தமிழர்களின் மனதை வீறுகொண்டு எழச்செய்கிறது.

"மானுடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்
வரம்பு கட்டாவிடினும் அன்றி நீர் பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர் தருமேல் மண்மீது மரங்கள்
வகைவகையா நெற்கள் புற்கள் மலிந்திருக்குமன்றோ
..................................................
ஊனுடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுக்கும்"
(பாரதியார் கவிதைகள்.ப.169)

என்றும்,

"மனதி லுறுதி வேண்டும்
வாக்கினி லேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்"(பாரதியார் கவிதைகள் ப.160)

என்று தன்னம்பிக்கை ததும்பும் வார்த்தைகளை வீசுகின்றார். இவர் போலவே, தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரம் என்பார் விவேகானந்தர். பழந்தமிழர்கள் படிக்காத பாமரர்களாக இருந்தாலும் சிறந்தவர்கள் என்பதை, "உழைக்கும் பாமர மக்களாகிய இவர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஒருவித முணு முணுப்பு இன்றி எண்ணற்ற கொடுமைகளைச் சகித்து வந்திருக்கிறார்கள். அதன் விளைவாக இன்று தளராத மன உறுதியைப் பெற்றிருக்கிறார்கள்; எல்லையற்ற துன்பங்களை அனுபவித்து, அதன் விளைவாக இன்று இவர்கள் அறியாத ஊக்கத்தைப் பெற்றுவிட்டார்கள். ஒருபிடி சோற்றை உண்டு வாழும் இவர்கள், உலகையே ஆட்டுவிக்கும் வல்லமை பெற்றுள்ளார்கள். இவர்களுக்கு அரை வயிற்றுக் கஞ்சி கிடைத்தாலும் அதுவே போதும். அகில உலகமும் இவர்களுடைய சக்தியைத் தாங்காது" **(புதிய இந்தியாவைப் படைப்போம்.ப.4)** என்ற இவரின் வீர வசனம் எழுச்சியூட்டுகிறது.

தைரியமும் நம்பிக்கையும் தமிழர்களிடம் இயற்கையாகவே அமைந்துள்ளதையும், தமிழர்களின் வீரத்தை நன்கு உணர்ந்து

இருக்கின்றார் என்பதையும் அவர்தம் கருத்தால் அறிந்துகொள்ள முடிகின்றது.

"பாரத பூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர் இந்நினை வகற்றா தீர்!
பாரதநாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர் இந்நினைவகற் றாதீர்"

என்ற மகாகவியின் சொல்லையும் விவேகானந்தரின் அறிவுரைகளையும் நினைவில் கொண்டு அனைவரும் பாரதம் செழிக்கப் போற்றுவோம்.